# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110280
09/AC/2020/CC I

1. District : CHENNAI
மாவட்டம்
PS: CC-I, V & AC
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.:
மு.த.அ. எண்
Date: 17-12-2020
நாள்

2. (i) Act சட்டம்: PC (AMENDMENT) ACT 2018 Sections பிரிவுகள்: 13 (1) (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 15.12.2020 Date to நாள் வரை : 16.12.2020
Time Period : நேர அளவு
Time from நேரம் முதல் : 15.12.2020 21.50 Hrs Time to நேரம் வரை : 16.12.2020 05.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.12.2020 Time நேரம் : 18.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.12.2020 Time நேரம் : 18.00 Hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 Km.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி TASMAC RETAIL SHOP [SHOP NO. 422] NO. 144/28, N.M. ROAD, AMAINJIKARAI, CHENNAI.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. ARUN
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் INDIAN
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DEPUTY TAHSILDAR / SPECIAL OFFICER FOR SURPRISE CHECK
(g) Address : முகவரி O/o. the Tahsildar, Mylapore, CHENNAI.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) D. Selvam, Sales Man, TASMAC RETAIL SHOP, SHOP NO. 422
2) V. Selvaperumal, Assistant Sales Man, TASMAC RETAIL SHOP, SHOP NO. 422, NO. 144/28, N.M. Road, Amainjikarai, Chennai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPERATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Bavani Devi 17/12/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ...T. BAVANI DEVI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண்

**Continuation of V&AC, CC –I, Cr.No. 09/AC/2020/CC –I U/s. 13 (1) (a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018**

Today 17.12.2020 at 18.00 hrs, when I was on duty at my office of DVAC, Chennai City-I Detachment, I received the endorsement order of the Deputy Superintendent of Police, Chennai City-I, Vigilance and Anti Corruption for register case and report dt. 16.12.2020, consequent to the tapal containing the complaint of Thiru.S. Arun, Deputy Tahsildar/Special Officer for Surprise Check, O/o the Tahsildar, Mylapore, Chennai – 28 dated. 16.12.2020 enclosed with proceedings of the Joint Surprise Check conducted at the TASMAC Retail Shop (Shop No.422), No.144/28, N.M.Road, Amainjikarai, Chennai on 15.12.2020 between 21.50 pm and 5 am. Statements and copies of records. The report of Special Inspection Cell Officer and proceedings runs as follows:- From S.Arun, Deputy Tahsildar/Special Officer for Surprise Check, O/o the Tahsildar, Mylapore, Chennai, to the Deputy Superintendent of Police, Vigilance and Anti Corruption, Chennai City-I Detachment, Chennai – 600 016 Lr.No.A1/005/2020 dated.16:12.2020 Sir, Sub:-Joint Surprise Check conducted on 15.12.2020 at TASMAC (Shop – 422) No.144/28, N.M.Road, Aminjikarai, Chennai – 600 029- Report forwarded – Regarding. I state that on 15.12.2020 a joint surprise check was conducted at TASMAC (Shop-422) No.144/28, N.M.Road, Aminjikarai, Chennai – 600 029 along with the Deputy Superintendent of Police, V&AC, CC-I Detachment, Chennai – 16 and his team between 15.12.2020 at 21.50 hrs and 16.12.2020 at 5 hrs. During the joint surprise inspection the incriminating documents were seized. I herewith sent the proceeding drawn during the time of Joint Surprise Inspection conducted on 15.12.2020 with incriminating documents for further course of action. Enclosure - 1) Original Proceeding, dt. 15.12.2020, 2) Documents seized during the joint surprise check 3) Statement of Witnesses Kindly acknowledge receipts of the same. (Sd/-)XXXX Deputy Tahsildar/Special Officer for Surprise

Check, O/o. the Tahsildar, Mylapore, Chennai – 28. **துணை வட்டாட்சியர்/ கூட்டுதணிக்கைக்காக அனுப்பபட்ட சிறப்பு அலுவலர், மைலாபூர் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை - 600 028 மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-I, காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து இன்று (15.12.2020) சென்னை- 600 029, அமைந்தகரை N.M. Road, எண்.144/28, என்ற முகவரியில் இயங்கும் (Shop -422) TASMAC Retail Shop-ல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை.**

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | (1) S. அருண்,<br>துணை வட்டாட்சியர்/ கூட்டுதணிக்கைக்காக அனுப்பபட்ட சிறப்பு அலுவலர்,<br>மைலாபூர் வட்டாட்சியர் அலுவலகம்,<br>சென்னை - 600 028.<br><br>(2) திரு.S.சங்கர்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>(3) திரு. A.சிவஆனந்த்,<br>காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>(4) திருமதி. C.சசிகலா,<br>காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. |

| | |
|---|---|
| | (5) திருமதி.T. பவானிதேவி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br>(6) திரு.கா.யுவராஜ், உதவி மேலாளர் (கணக்கு), TASMAC, நெ.பி-4, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-58. |

சென்னை- 600 029, அமைந்தகரை N.M. Road, எண்.144/28, என்ற முகவரியில் அடித்தளத்தில் இயங்கும் (Shop -422) TASMAC Retail Shop-ல் மதுபானங்கள் மற்றும் மதுபான வகைகள் அரசு நிர்ணயித்த விலையை விட அதிகமாக விலை வைத்து நுகர்வோர்க்கு விற்பனை செய்து, அதன் மூலம் கையூட்டுப் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி TASMAC Retail Shop (Shop -422)ல் துணை வட்டாட்சியர்/ கூட்டுதணிக்கைக்காக அனுப்பபட்ட சிறப்பு அலுவலர், மைலாபூர் வட்டாட்சியர் அலுவலகம், சென்னை - 600 028 மற்றும் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-I, காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து இன்று (15.12.2020) இரவு சுமார் 21.50 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி TASMAC Retail Shop (Shop -422) N.M. Road, கடையானது K.G Master Piece என்ற அடுக்குமாடி குடியிருப்பின் அடித்தளத்தில் அமைந்துள்ளது. இந்த அடுக்குமாடிகுடியிருப்பு Underground, Ground Floor, 1st Floor மற்றும் 2nd Floor ஆகிய தளங்களை கொண்டுள்ளது. இதன் பிரதான வாயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இந்த கடைக்குள் நுழைந்தவுடன் சில்லறை விற்பனை நிலையம் உள்ளது. அதற்குள் சென்றால் இந்த கடைக்கான Godown அமைந்துள்ளது. இந்த கடையை கூட்டு தணிக்கை குழுவினர் சோதனையிட்டபோது திரு.D. செல்வம், Sales Man, திரு.V. செல்வபெருமாள், Assistant Sales Man, E. அருள்குமார், Sales man மற்றும் A. ராஜா, Rep from S.N.J Breweries Ltd ஆகியோர் பணியில் இருந்தனர்.

சோதனையின் போது Sales Man ஆக பணிபுரியும் திரு.செல்வம் என்பவரை சோதனை செய்தபோது, அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.590/-காணப்பட்டது. அதைபற்றி அவரிடம் விளக்கம் கேட்டபோது, தனது மதிய சாப்பாட்டு செலவிற்காக மற்றும் அன்றாட செலவிற்க்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த பணம் மீண்டும் அவரிடமே

ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரிடம் இந்த கடையின் Supervisorரை பற்றி கேட்டபோது, இந்த கடையின் மேற்பார்வையாளர் திரு.ராஜேந்திரன் என்பவர் கடந்த ஒன்றரை மாதங்களாக மருத்துவ விடுப்பில் இருப்பதாகவும், திரு.கிருஷ்ணன் மேற்பார்வையாளர் TASMAC கடை 411 அல்ஷாமால், எழும்பூர் என்பவர் கூடுதல் பொறுப்பாக இந்த கடைக்கு உள்ளதாக தெரிவித்தார் அவரும் இன்று விடுப்பில் சென்று விட்டதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து சென்னை மத்திய மாவட்ட TASMAC மேலாளர் திருமதி.ஜெயந்தி அவர்களை தொடர்பு கொண்டபோது அவர் திரு.யுவராஜ், உதவி மேலாளர் (கணக்கு) அவர்களை மேற்படி கடையில் Stock எடுக்கவும், விஜிலென்ஸ் நடவடிக்கைக்கு உதவியாக இருக்கவும் அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். அதன் பேரில் திரு.யுவராஜ் கடைக்கு சுமார் 23.30 மணியளவில் வந்தார்.

தொடர்ந்து சோதனையின் போது திரு.V. செல்வபெருமாள், Assistant Sales Manனை சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.5/- (coin) தவிர வேறு ஏதும் காணப்படவில்லை. அதைப்பற்றி விளக்கம் கேட்க, அதற்கு அவர் தனது வீடு மிகவும் அருகாமையில் இருப்பதாகவும், அதனால் தான் பணம் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

சோதனையின் போது E. அருள்குமார், Sales Man என்பவரை சோதனை செய்தபோது அவரது தனது சட்டையின் மேல் பாக்கெட்டில் ரூ.40/- காணப்பட்டது. அதைப்பற்றி விளக்கம் கேட்டபோது, தான் காலையில் ரூ.80/- எடுத்து வந்ததாகவும், மதிய சாப்பாட்டின்போது ரூ.40/- செலவு செய்து விட்டதாகவும், மீதி பணம் ரூ.40/- இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த கடையில் Sales Man பற்றாக்குறை என்பதால் சென்னை மத்திய மாவட்ட TASMAC மேலாளர் திருமதி.ஜெயந்தி அவர்களின் வாய்மொழி உத்தரவின்பேரில் கடந்த ஒரு மாதகாலமாக இந்த கடையில் வேலை பார்த்து வருவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து திரு.A. ராஜா, Rep from S.N.J Breweries Ltd என்பவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூ.425/- காணப்பட்டது. அதைப்பற்றி விளக்கம் கேட்டபோது, அதற்கு அவர் தனது சொந்த ஊர் விழுப்புரம், கருவாச்சி கிராமம் என்றும், தான் ஊருக்கு செல்வதற்க்காக Bus பயண செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். இவர் Training Repஆக கடந்த ஒரு மாத காலமாக இந்த கடையில் வேலை செய்து வருவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து இந்த கடையின் மைய பகுதியில் உள்ள விற்பனையாளரின் Cash Tableயை சோதனை செய்தபோது, அந்த Table-ன் வலது பக்க மேல் டிராவில் பணம் ரூ.1,83,150/- காணப்பட்டது. இந்த Table-ன் இடது பக்க டிராவில் பணம் ரூ.5300/-, ரூ.4000/- ரூ.370/- மற்றும் ரூ.200/- தனித்தனியாக சுருட்டி வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதைப்பற்றி திரு.செல்வம், Sales Man அவர்களிடம் கேட்க, அதற்கு அவர் வலது பக்க மேல் டிராவில் இருந்த பணம் 1,83,150/- விற்பனை மூலம் வந்த பணம் என்று தெரிவித்தார். தொடர்ந்து ரூ.5300/- மற்றும் ரூ.4000/- பற்றி கேட்க அதற்கு அவர் பழைய அட்டை பெட்டிகளை விற்று பெற்ற பணம் என்றும் இதை அரசுக்கு DD எடுத்து செலுத்தவேண்டுமென்றும், மற்றும் சுருட்டி வைக்கப்பட்ட ரூ.370/-, ரூ.200/- ஆகியவை கிழிந்த ரூபாய் நோட்டுகள் என்பதால் சுருட்டி வைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

சோதனையின் போது இந்த கடையின் இன்றைய விற்பனை மற்றும் இருப்பு சம்பந்தமாக பட்டியல் ஆகியவற்றை திரு.செல்வம், Sales Man மற்றும் திரு.யுவராஜ், உதவி மேலாளர் ஆகியோர் ஆஜர் செய்தனர். இதில் POS Card மூலம் விற்பனை செய்த மொத்த தொகை ரூ.1,67,680/-, ரொக்கமாக விற்பனை செய்த தொகை ரூ.2,02,180/-, ஆக மொத்தம் இந்த கடையின் இன்றைய மதுபானங்கள் மொத்த விற்பனை தொகை ரூ.3,69,860/- என குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பணத்தை எண்ணிபார்க்கையில் ரூ.1,83,150/- மட்டுமே இருந்தது. இன்றைய விற்பனையில் ரூ.19,030/- குறைவாக (Shortage) இருந்தது. இது சம்மந்தமாக திரு. திரு.செல்வம், Sales Man மற்றும் திரு.V. செல்வபெருமாள், Assistant Sales Man ஆகியோர் சரியான விள்க்கம் அளிக்கவில்லை. சோதனையின் போது கடையில் இருந்த விற்பனை தொகை திரு.செல்வம், Sales Man அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த கடைக்கான Daily Chitta Registerரை ஆய்வு செய்ததில் 28.11.2020 முதல் 15.12.2020 வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. வருகைபதிவேடு செப்டம்பர் 2020 முதல் தொடங்கப்பட்டு 15.12.2020 வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பயன்படுத்தாத நிலையிலுள்ள மூன்று நுகர்வோர் ரசீது புத்தகங்கள் (வரிசை எண். 1004 முதல் 1900 வரை, வரிசை எண். 38004 முதல் 39000 வரை மற்றும் வரிசை எண்.63001 முதல் 64000 வரை) காணப்பட்டது.

கீழ்கண்ட ஆவணங்கள் சோதனையின் போது கைப்பற்றப்பட்டது.

| S.No. | Description of Document |
| --- | --- |
| 1) | தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகதுறை (உணவு பாதுகாப்பு பிரிவு) அவர்களின் Form “C” License. (License No. 12418002004818)- நகல் |

2) தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறை, தொழிலாளர் உதவி ஆய்வாளர், 31 வது வட்டம், நெம்பர் 1, முகப்பேர் ரோடு, திருமங்கலம், சென்னை - 101 அவர்களின் கடிதம் ந.க.எண். 61/2020, நாள். 24.09.2018. சட்டமுறை எடையளவுகள் (பொட்டல பொருட்கள்) விதிகள் 2011ன் படி பொட்டல பொருட்கள் (Kingfisher Select Premium Beer (CH) – 650ml) அதிகபட்ச சில்லறை விற்பனை விலை ரூ.130/-க்கு பதிலாக ரூ.135/-க்கு கூடுதலாக ரூ.5/- அதிகமாக விற்பனை செய்யப்பட்டது தொடர்பான பறிமுதல் ரசீது எண். 203929 திரு. கிர்லோஷ்குமார் (44) (MD) TASMAC -422, Liquor Shop No. 14/144/28, Nelson Manickam Road, Aminjikarai, Metha Nagar, Chennai – 94 –நகல்.

3) Stock cum Sale Statement, dated 14.12.2020

4) Stock cum Sale Statement, dated 15.12.2020

சோதனையின்போது மேற்படி கடையின் விற்பனைக்காக பயன்படுத்தப்படுகிற Swiping Machines Move/2500 – Ingenico TID No. 63053083 மற்றும் மற்றொரு Swiping Machine ஆன Verifone TID No. 33809384 என்ற பெயரிலுள்ள கருவிகள் சோதனை செய்யப்பட்டன. Move/2500 – Ingenico Machineல் ரூ.2640/- காணப்பட்டது. மற்றும் Verifone machineல் ரூ.165040/- காணப்பட்டது.

இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (16.12.2020) அதிகாலை சுமார் 5 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, வாடிக்கையாளருக்கோ உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது திரு.D. செல்வம், Sales Man, திரு.V. செல்வபெருமாள், Assistant Sales Man, E. அருள்குமார் மற்றும் A. ராஜா திரு.கா.யுவராஜ், உதவி மேலாளர் (கணக்கு), ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது.

ஒம்/-XXXX
S. அருண்,
துணை வட்டாட்சியா/ கூட்டுதணிக்கைக்காக
அனுப்பபட்ட சிறப்பு அலுவலா்
மையிலாபூர் வட்டாட்சியர் அலுவலகம்,
சென்னை - 600 028.

ஒம்/-XXXX
திரு.S.சங்கர்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சென்னை நகரப் பிரிவு-1, ஊ.த.க.துறை.
சென்னை - 16.

ஓம்/-XXXX
திரு. A சிவஆனந்த்,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

ஓம்/-XXXX
திருமதி. C.சசிகலா,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

ஓம்/-XXXX
திருமதி.பவானிதேவி
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

ஓம்/-XXXX
திரு.D. செல்வம், Sales Man,
TASMAC (Shop 422), No.144/28,
N.M. Road, Aminjikarai,
Chennai – 29.

ஓம்/-XXXX
திரு.V. செல்வபெருமாள்,
Assistant Sales Man,
TASMAC (Shop 422),
No.144/28, N.M. Road, Aminjikarai,
Chennai – 29.

ஓம்/-XXXX
E. அருள்குமார்,
TASMAC (Shop 422),
No.144/28, N.M. Road, Aminjikarai,
Chennai – 29.

ஓம்/-XXXX
A. ராஜா,
TASMAC (Shop 422),
No.144/28, N.M. Road, Aminjikarai,
Chennai – 29.

ஓம்/-XXXX
திரு.கா.யுவராஜ்,
உதவி மேலாளர் (கணக்கு), TASMAC,
அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை

Sir,

Received the above complaint with enclosures, a case was registered in V&AC, CC – I Detachment, Cr.No.9/AC/2020/CC – I U/s. 13 (1) (a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 17.12.2020 at 18.00 hrs. and took up investigation. The original F.I.R along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, statements of 1) Thiru.D. Selvam 2) Thiru.V. Selva Perumal 3) Thiru.Yuvaraj 4) E. Arulkumar and 5) A. Raja and copies of documents are submitted before the Hon'ble Special Judge under the case for Prevention of Corruption Act, Chennai and copies are forwarded to superior officers concerned.

Bavanidevi 17/12/2020
(T. Bavanidevi),
Inspector of Police,
Chennai City – I Detachment,
Vigilance & Anti-Corruption,
Chennai – 16.